# சாரதி சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

1.0 தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சில் நிழவும் சாரதி சேவையின் III ஆம் வகுப்பு வெற்றிடத்திற்காக அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கிணங்க விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 தொழில் தொடர்பான பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சைகளின் முடிவுகளுக்கமைவாக திறமை அடிப்படையில் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் நிழவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

3.0 தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சில் நிழவும் வெற்றிடங்களிற்கேற்ப நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் பயன்வலுப்பெறும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களின் ஏதேனும் எண்ணிக்கையினை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாதிருப்பதற்கும் நியமன அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

4.0 **சம்பளம் :-** 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக சாரதிகள் சேவையின் III, II மற்றும் I ஆகிய வகுப்புகளுக்கு மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது, PL 3-2016 ரூபா 25,790 - 10x270-10x300-10x330-12x350–38,990 ஆகும். ரூபா 28,790/- சம்பள உயர்வுபெறுவதற்கு II ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வும், ரூபா 31,820/- சம்பள உயர்வுபெறுவதற்கு I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வும், ரூபா 35,140/- சம்பள உயர்வுபெறுவதற்கு விசேட வகுப்பிற்கு பதவி உயர்வும் பெறுதல் வேண்டும்.

5.0 இப் பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

6.0 **தகைமை :** சாரதி சேவையின் III ஆவது வகுப்பு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக பின்வரும் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**(அ) கல்வி தகைமை**

கல்விப் பொதுதராதர (சாதாரணதர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் சிங்களம் / தமிழ்மொழி உள்ளடங்களாக இரண்டு திறைமை சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**(ஆ) தொழில் தகைமை**

(i) தனியார் / வாடகை வாகனம் மற்றும் சுமையற்ற நிறை 24 அந்தருக்குக் குறைந்த ஸ்ரேசன் வெகன் வாகனம் ஓட்டுவதற்கான மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதிக்கு மூன்று (3) வருடங்களுக்கு முன்னர் ஆகக் குறைந்தது சீ மற்றும் சீ1 வாகன வகுப்பிற்கான அனுமதிப்பத்திரம் அல்லது புதிய அனுமதிப்பத்திரத்திற்கமைவாக பீ வகுப்பிற்கான அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) வீதி போக்குவரத்துச் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான சிறந்த அறிவு காணப்படுதல் வேண்டும்.

**(இ) அனுபவம்**

வாகன சாரதியொருவராக மூன்று வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (அனுபவத்தினை சான்றிழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

**(ஈ) உடற் தகைமை**

ஆகக் குறைந்தது 05 அடி உயரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
பகல் வேளையிலும் இரவு நேரத்திலும் சேவையாற்ற வேண்டியுள்ளதனால் அதற்குரிய உடற்றகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் சிறந்த கண்பார்வையினையும் கொண்டிருத்தல் வேண்டும். அரசாங்க வைத்திய அலுவலர் ஒருவரினால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழ் ஒன்றின் மூலம் அதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**(உ) ஏனைய தகைமை**

(i) இலங்கை பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்

(ii) விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்பொழுது அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறும் விண்ணப்பதாரிகளுக்கு ஆகக் கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

(iii) விண்ணப்பதாரி சிறந்த நற்குணமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) அனைத்து விண்ணப்பதாரியும் பதவிக்குரிய அனைத்து தகைமையையும் விண்ணப்பம் கோருகின்ற திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் அவசியமாகும்.

(ஊ) அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை முறையின் V ஆம் அத்தியாயத்திற்கு அமைவாக அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகைமை பெறாத ஒருவராக இருத்தலாகாது.

## 7.0 விண்ணப்பம் கோரல்

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு நிழவுகின்ற சாரதி சேவையில் காணப்படும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| அமைச்சு | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1' தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | சாரதி சேவையின் வகுப்பு III | 16 |

## 8.0 தொழிற் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை (-

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் விண்ணப்பதாரிகளின் அடிப்படைத் தகைமைகளை பரிசோதிப்பதற்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தொழிற் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெறுகின்ற புள்ளிகளினை திறமையடிப்படையில் ஒழுங்குபடுத்தி தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் சாரதி சேவையின் III ஆம் வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு விரும்பிய மொழிமூலத்தினை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் தொழில் பரீட்சையானது குறித்த மொழி மூலமே இடம்பெறும்.

தொழிற் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் நடவடிக்கைமுறை பின்வருமாறு;

| | விடயம் | ஆகக்கூடிய புள்ளி | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| (i) | வாகனம் ஓட்டல் தொடர்பான திறன் | 40 | 20 |
| (ii) | வீதி ஒழுங்கு பற்றிய நடைமுறை அறிவு | 40 | 20 |
| (iii) | மோட்டார் வாகன இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு | 20 | 10 |

குறிப்பு – பதவிக்காக பெற்றுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் வெளிவாரி செயற்பாடுகள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்களின் மூலம் நிரூபித்தல் வேண்டும். இத்தகைமைகள் விண்ணப்ப இறுதித் திகதியில் செல்லுபடியானதாகவிருத்தல் வேண்டும்.

9.0 விண்ணப்பத்திரத்தினை பூரணப்படுத்தும் பொழுது மிகவும் கவனத்துடனும் சரியான தகவல்களையும் வழங்குதல் வேண்டும். தகைமைகளை பரிசீலிக்கும்போது எவரேனும் விண்ணப்பதாரி தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பத்தினை இரத்துச்செய்யமுடியும். விண்ணப்பதாரியொருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எச்சந்தர்ப்பத்திலாவது பிழையானது எனக் கண்டறியப்படுமாயின், அவர் அரசாங்க சேவையில் பதவியிறக்கத்திற்குட்படமுடியும்.

10.1 குறித்துறைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மாதிரியினை ஒத்தில்லாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். முறையாக விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்தாததினால் ஏற்படும் இழப்புகளுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாவார். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.10.28 ஆகும்.

10.2 விண்ணப்பத்தினை அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சாரதி சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்"** எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

11.0 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளின் அடிப்படையில் 2016.10.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பித்தவர்கள் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் தொழிற் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எவ்வாறாயினும் அவ்வாறு விண்ணப்பித்த விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமையினை பூர்த்தி செய்துள்ளார் என்பதாகாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற அறிவித்தலுக்கமைவாக தகைமை காணப்படுகின்றதா என்பதனை பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமையினைக் கொண்டிருக்கவில்லை எனத் தெரியவருமாயின் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

12.0 விண்ணப்பதாரிகள் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை நேர்முகப் பரீட்சைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

i. ஆட்பதிவுத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை.

ii. செல்லுபடியான கடவுச் சீட்டு.

13.0 இங்கே குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்ட திட்டங்களுக்கமைவாக செயற்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைக்கிணங்க

ஒப்பம் : ஏ.எம்.அசங்க தயாரத்ன
மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்)
தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்காக

2016.10.13
தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
"மிலோதா" (பழைய ரைம்ஸ் கட்டிடம்) முதலாவது மாடி, பிறிஸ்ரல் வீதி, கொழும்பு - 01.

தொலைபேசி இல: 011-4461500$011-4461602 தொலை நகல்( 011-2326080